செய்தி வெளியீடு எண்: 412 நாள் : 01.08.2013

**செய்தி வெளியீடு**

**மக்களுடன் நேரடித் தொடர்பில் உள்ள கூட்டுறவு சங்கத் தலைவர்களின் பணிகள் தன்னலமற்ற சேவையாக இருக்க வேண்டும்**

**மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள்**

**வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் தலைவர்கள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் தலைவர், துணைத்தலைவர் மற்றும் இயக்குநர்கள், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் துடியலூர் கூட்டுறவு விற்பனை கூட்டுறவு சேவா சங்கத்தின் தலைவர்களுக்கு கூட்டுறவு நிர்வாக நடைமுறை பயிற்சியைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை!**

**இந்தியாவிலேயே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலில் தமிழ்நாட்டில் நான்கு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கு பரிசு**

- **தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், சென்னை**
- **பொள்ளாச்சி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம், பொள்ளாச்சி.**
- **பட்டுக்கோட்டை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம், பட்டுக்கோட்டை**
- **உடுமலைப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம், உடுமலைப்பேட்டை.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இன்று **(01.08.2013)** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில், சென்னை நடேசன் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் தலைவர், துணைத்தலைவர் மற்றும் இயக்குநர்கள் மற்றும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், துடியலூர் கூட்டுறவு விற்பனை சேவா சங்கத்தின் ஸ்தாபனம் ஆகியவற்றின் தலைவர்கள் ஆகியோருக்கு சங்க நிர்வாக நடைமுறைப் பயிற்சியினை தொடங்கிவைத்து உரையாற்றினார்.

அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகையில், ‘‘மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்’’ கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஆணையத்தை அமைத்தபின்பு, 12 ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் சிறப்பான முறையிலும், ஜனநாயக முறையிலும் நடைபெற்று வருகின்றது என்றும் இத்தேர்தலில் வெற்றி பெற்று பயிற்சிக்கு வந்திருக்கும் அனைத்துத் தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இந்தியாவிலேயே முதன்முதலாக திருவள்ளூர் மாவட்டம், திரூர் என்ற கிராமத்தில் 1904 ஆம் ஆண்டு, விவசாயிகளுக்கு என்று முதல் கூட்டுறவு சங்கம் தொடங்கப்பட்டு, கடந்த 109 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகிறது. தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் முதல் கூட்டுறவு விற்பனைச் சங்கம் கும்பகோணம் விவசாய சங்கம் என்ற பெயரில் 1913ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தற்போது தமிழ்நாட்டில் 112 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

**அண்மையில் புதுதில்லியில் நடைபெற்ற பதினாறாவது இந்திய கூட்டுறவு காங்கிரசு கூட்டத்தில் அகில இந்திய அளவில் உள்ள 7202 வேளாண்மை கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உள்ளது. இதில் தமிழகம் மட்டும் தான் 1 கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் 3 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் சிறந்த சங்கங்களாக தெரிவுச் செய்து விருது வழங்கி சிறப்பித்துள்ளது என்பது மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

- **தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், சென்னை**
- **பொள்ளாச்சி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம், பொள்ளாச்சி.**
- **பட்டுக்கோட்டை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம், பட்டுக்கோட்டை**
- **உடுமலைப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம், உடுமலைப்பேட்டை.**
- 2012–13–ஆம் ஆண்டில் வேளாண் விளைபொருட்கள் ரூ.708.10 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டது. 30.06.2013 வரையில் ரூ.112.36 கோடி அளவிற்கு வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.
- 2010 –11 –ஆம் ஆண்டில் ரூ.57.13 கோடி அளவிற்கு வழங்கப்பட்ட தானிய ஈட்டுக்கடன், 2012–13–ஆம் ஆண்டில் ரூ.84.90 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.
- 2010–11–ஆம் ஆண்டில் ரூ.345.00 இலட்சம் அளவிற்கு வழங்கப்பட்ட நகைக் கடன், 2012–13 –ஆம் ஆண்டில் ரூ.467.27 இலட்சமாக உயர்ந்துள்ளது.
- 2013-14ஆம் ஆண்டில் 25 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் இரும்பு கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை ரூ.147.26 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

- 2011-12-ஆம் ஆண்டில் 13 சூரிய உலர்கலன்கள் மற்றும் 2012-13-ஆம் ஆண்டில் 9 சூரிய உலர்கலன்கள் என மொத்தம் 22 சூரிய உலர்கலன்கள் ரூ.129.58 இலட்சம் அரசு மான்யத்தில் நிறுவப்பட்டுள்ளன. 31.03.2013 வரை 5,18,333 தேங்காய்கள் பதனிடப்பட்டு கொப்பரையாக மாற்றப்பட்டுள்ளன.
- 2013-14-ஆம் ஆண்டில் ரூ.17.67 இலட்சம் மதிப்பில் சூரிய சக்தி கொப்பரை உலர் கலன்கள் நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது .
- 2013-14-ஆம் ஆண்டில் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து பெருந்துறை கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு ரூ.18.90 இலட்சமும், பவானி கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு ரூ.18.90 இலட்சமும் மற்றும் உசிலம்பட்டி கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு ரூ.19.13 இலட்சமும் கணினி எடை மேடைகள் அமைப்பதற்கு மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.
- 2011-12ஆம் ஆண்டில் ரூ.822.57 இலட்சம் மதிப்பிலான கொப்பரைக் கொள்முதல் செய்யப்பட்டது. இக்கொள்முதல் 2012-13ஆம் ஆண்டில் ரூ.15,380.00 இலட்சமாக உயர்ந்துள்ளது.
- 2012–13–ஆம் ஆண்டில் இரசாயன உரங்கள் ரூ.644.48 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டது. 2013–14இல் 30.06.2013 வரை ரூ.90.40 கோடி மதிப்பிற்கு உரங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- **தமிழக விவசாயிகளுக்குத் தங்கு தடையின்றி உரவிநியோகம் செய்யும் பொருட்டு கடந்த 3 ஆண்டுகளாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் டான்பெட் நிறுவனத்திற்கு வட்டியில்லாக் கடனாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.150/– கோடியினை அளித்து, அனைத்துத் தொடக்க கூட்டுறவுச் சங்கங்களிலும் டி.ஏ.பி. உரம் போதுமான அளவு வைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.**
- 2012–13–ஆம் ஆண்டிற்கு 34,188 மெட்ரிக் டன், 2013–14ஆம் ஆண்டிற்கு ஜுன் திங்கள் முடிய 5,816 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.
- 2012–13ஆம் ஆண்டில் ரூ.19.86 கோடிக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டது. 2013–14ஆம் ஆண்டில் 30.06.2013 வரை ரூ.1.09 கோடி மதிப்பிற்கு விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- 2012–13–ஆம் ஆண்டில் கூட்டுறவுகள் மூலம் பூச்சி கொல்லி மருந்துகள் ரூ.19.86 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டது. 2013–14–ஆம் ஆண்டில் 30.06.2013 வரை ரூ.0.72 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- 2012–13–ஆம் ஆண்டில் கூட்டுறவுகள் மூலம் வேளாண்மை உபகரணங்கள் ரூ.1.31 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டது. 2013–14–ஆம் ஆண்டில் 30.06.2013 வரை ரூ.0.36 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- 2012–13–ஆம் ஆண்டில் 3901.903 மெட்ரிக் டன் அளவிற்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வேளாண் விளைப்பொருட்கள் பதனிடப்பட்டுள்ளன. 2013–14–ஆம் ஆண்டில் 30.06.2013 வரை 3443.510 மெட்ரிக் டன் அளவிற்கு வேளாண் விளைப்பொருட்கள் பதனிடப்பட்டுள்ளன.
- 2011–12 –ஆம் ஆண்டு நிதியாண்டில் கிராமக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ் ரூ 107.26 கோடி மதிப்பீட்டில் 1166 கிடங்குகள் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டது. இத்திட்டத்திற்காக தமிழக அரசு, ரூ 105.47 கோடியை மானியமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கியுள்ளது.
- 2012–13ஆம் நிதியாண்டில் ரூ 129.76 கோடி மதிப்பீட்டில் 1104 கிடங்குகள் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக தமிழநாடு அரசு ரூ 128.80 கோடியை மானியமாக கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கியுள்ளது.

இவ்வாறு மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் கூடுதல் பதிவாளர்கள் திரு.இரா.கார்த்திகேயன், திரு.கே.ராஜேந்திரன் திரு. இராம. ஜெயம்பாண்டியன் மற்றும் திருமதி வெ. நந்தகுமாரிஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9